



# இயற்கை வளங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண் : 55

அறிவிப்புகள்

2024 – 2025

# இயற்கை வளங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 55

அறிவிப்புகள்

2024-2025

**துரைமுருகன்**

நீர்வளத் துறை அமைச்சர்

## 1. புவியியல் மற்றும் சுரங்க ஆணையர் அலுவலகத்தில் உள்ள வேதியியல் ஆய்வகம் ரூபாய் 2 கோடி செலவில் மேம்படுத்தி புதுப்பிக்கப்படும்.

சென்னையில் கடந்த 2015-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் கிண்டியில் உள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் அலுவலகத்தின் தரை தளம் முழுவதும் மூழ்கியது. இதனால் தரை தளத்தில் அமைந்துள்ள வேதியியல் ஆய்வகமும் மூழ்கியது. ஆய்வகத்தில் பயன்படுத்தப்பட்ட அனைத்து கருவிகளும் வெள்ளத்தில் சேதமடைந்தன.

எனவே, புவியியல் மற்றும் சுரங்க ஆணையர் அலுவலகத்தில் உள்ள வேதியியல் ஆய்வகம் ரூபாய் 2 கோடி செலவில் மேம்படுத்தி புதுப்பிக்கப்படும்.

**2) தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் (டாமின்), ரூபாய் 1 கோடி செலவில் புதிய வணிக மேலாண்மை மென்பொருள் உருவாக்கி, குவாரிகளின் செயல்பாட்டினை துல்லியமாக கண்காணிக்கவும், திறனாய்வு செய்யவும், புதிய திட்டங்களை தீட்டவும் ஏற்பாடு செய்யப்படும்.**

தமிழ்நாடு கனிம நிறுவனம், சுரங்கம் மற்றும் குவாரிகளின் செயல்பாட்டினை கண்காணிக்க குவாரி மேலாண்மை மென்பொருளை (Q.M.S) பயன்படுத்தி வருகிறது.

நிகழ்கால தேவைகளை கருத்தில் கொண்டு ரூபாய் 1 கோடி செலவில் புதிய வணிக மேலாண்மை மென்பொருள் (Enterprise Resource Planning - ERP) உருவாக்கி, குவாரிகளின் செயல்பாட்டினை துல்லியமாக கண்காணிக்கவும், திறனாய்வு செய்யவும், புதிய திட்டங்களை தீட்டவும் ஏற்பாடு செய்யப்படும்.

3) தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) மூலம், வேலூர் மாவட்டம், மகிமண்டலம் சுரங்கப் பகுதியில், ரூபாய் 7 இலட்சம் செலவில், 3000 மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.

சுரங்கங்கள் மற்றும் குவாரிகளுக்கு அருகில் உள்ள பகுதிகளின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம், வேலூர் மாவட்டம், மகிமண்டலம் சுரங்கப் பகுதியில் தமிழ்நாடு கனிம நிறுவனம் 7000 மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து வருகிறது.

இப்பகுதியில், ரூபாய் 7 இலட்சம் செலவில், மேலும் 3000 மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து, சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.

4) தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) மூலம், இராணிப்பேட்டை மாவட்டம், ரெண்டாடி கிராமத்தில் ரூபாய் 34 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடமும், ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை குடிநீர் தொட்டியும் அமைத்து தரப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் குவாரிகளைச் சுற்றியுள்ள பகுதிகளின் சமுதாய நலன் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும், இதன் ஒரு பகுதியாக இராணிப்பேட்டை மாவட்டம், ரெண்டாடி கிரானைட் குவாரிக்கு அருகில் உள்ள ரெண்டாடி கிராமத்தில் ரூபாய் 34 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடமும், ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை குடிநீர் தொட்டியும் அமைத்து தரப்படும்.

5) தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் (டாமின்), ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் செயற்கை நுண்ணறிவு திறனுடன் இயங்கக்கூடிய கண்காணிப்பு புகைப்படக் கருவிகள் (Cameras) கொள்முதல் செய்யப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவத்தின் குவாரிகளை கண்காணிக்க, செயற்கை நுண்ணறிவு திறனுடன் இயங்கக்கூடிய கண்காணிப்பு புகைப்படக் கருவிகள் (Cameras) ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, குவாரிகளில் நிறுவி, சுரங்கப்பணிகளை கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**6) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் (டான்மேக்), ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில், புதிய பொருட்கள் தயாரிப்பு மற்றும் மதிப்பு கூட்டல் பொருட்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**துரைமுருகன்**
நீர்வளத் துறை அமைச்சர்